2026 பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 – தங்கவேல் |
| தகப்பனார் பெயர்: | பொம்மிநாயக்கர் |
| ஊர்: | சடையால்பட்டி, வாடிப்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயக்கூலி |
| வயது : | 73 |

11.02.2026

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது குடும்ப அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, சடையால்பட்டி – வாடிப்பட்டியில் கட்டடப்பொம்மன் தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாயக்கூலியாக வேலை செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு காலை 11.30 மணியளவில் நானும், வீரையா என்பவரும் ஜெயபால் வீட்டின் அருகில் பழனிசெட்டிபட்டி காவல்நிலைய காவலர்கள் வந்தார்கள், ஜெயபால் வெள்ளையை குத்திய வழக்கு சம்பந்தமாக விசாரணைக்காக வந்துள்ளோம் என்று போலீசார் கூறினார்கள். போலீசார் சம்பவ இடத்தில் அக்கம் பக்கம் உள்ள

வீடுகள் குறித்தும், சம்பவம் குறித்தும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் என்னையும், வீரையாவும் சாட்சி கையொப்பம் இடச் சொன்னார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.3–** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்றொரு கையொப்பம் வீரையாவினுடையது. பின்பு சுமார் 12 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து இரத்தக்கறைப்படிந்த மண் மற்றும் இரத்தம் இல்லாத மண்ணை தனியாக எடுத்து இரண்டையும் தனித்தனியாக தாளில் மடித்து எடுத்துச்சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் இரத்தக்கறைப்படிந்த மண்ணும், இரத்தக்கறைப்படியாத மண்ணும் சம்பவ இடத்திலிருந்து எடுத்த மண் தான். அவை இரத்தக்கறைப்படிந்த மண் **சா.பொ.3–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரத்தம் இல்லாத மண் **சா.பொ.4–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் அன்றைய தேதியில் சம்பவ இடத்தில் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. என்னிடம் போலீசார் கையொப்பம் இடச் சொன்னார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் எனக்கு படிக்க தெரியாது, ஆனால் நான் கையொப்பமிட்ட தாளில் எழுதப்பட்டிருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் எனது வீடு இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவ இடத்தில் மண் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.02.11 18:18:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.02.2026